# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110203

1. District : Chennai PS: Chennai city - III Year: 2020 FIR No.: 2/AC/2020/EC-III Date: 03.09.20
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முதஅ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The prevention corruption Act 1988 (Amended 2018) Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 (Amended 2018)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை On 02.09.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை at about 13.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.09.2020 Time : நேரம் 18.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.09.2020 Time : நேரம் 18.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Near ANJAPPAR HOTEL ASHOK NAGAR, CHENNAI North East 5 K.M.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. K. PARTHIBAN (b) Father's/ Husband's Name : Tr. KANNAPPAN
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1966 (d) Nationality : INDIAN (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Commercial Assistant (TNEB) (g) Address : முகவரி No: 10/2, Thandavarayan street Gandhinagar main road, Ekkatuthangal, Chennai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. MURUGESAN, Administrative Officer O/o The Superintending Engineer, maintenance & Distribution circle, K.K. Nagar, South-I, Chennai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No Delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ....Thiru D. Sivagami.... Rank ....Inspr of Police.... to take up the Investigation / Refused Investigation / transferred to PS....VEAC, CC-III, Ch....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 3.9.2020 | [signature] 03/09/2020.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் D. Sivagami, Inspector of Police
Rank: நிலை ..................No. எண் .........
VEAC, CCU-III, Chennai.

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016

பணிந்தனுப்பப்படுகிறது. 03.09.2020-ந்தேதி மாலை 1800 மணிக்கு சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3-ன் காவல் ஆய்வாளர் D.சிவகாமி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது புகார்தாரர் திரு. K.பார்த்திபன் கணிணியில் அச்சுப்பதிவு செய்து கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புனர், K.பார்த்திபன், ஆ/வ-54, த/பெ.G.A.கண்ணப்பன் (லேட்), எண். 10/2, தாண்டவராயன் தெரு, காந்தி நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 032. பெறுநர், காவல் ஆய்வாளர், சென்னை நகரபிரிவு 3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை - 600 016. நான் தற்போது வணிக உதவியாளராக உதவி செயற்பொறியாளர், சிறப்பு பராமரிப்பு பிரிவு, மின்பகிர்மான வட்டம், தெற்கு-1, சென்னை, கிண்டி அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 2004ஆம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், இராமாபுரம் அலுவலகத்தில் வணிக உதவியளராக வேலை செய்தபோது என்மீது லஞ்ச குற்றத்திற்காக லஞ்ச ஒழிப்புத்துறையினர் வழக்கு பதிவு செய்தனர், அதைத் தொடர்ந்து தற்காலிக பதவிநீக்கம் செய்யப்பட்டேன். அந்த விஜிலென்ஸ் கேஸானது திருவள்ளூர் நீதிமன்றத்தின் முன்பு குற்றம் நிருபிக்கப்படாததால் என் மீது சுமத்தப்பட்ட குற்றம் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து நான் 2016ஆம் ஆண்டு தற்காலிக பணிநீக்கத்திலிருந்து மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அதன்பிறகு எனது பணிக்கான முழு மாத சம்பளம் முழுவதுமாக வழங்கப்படவில்லை. இதனை தொடர்ந்து நான் உயர் நீதிமன்றத்தை அணுகியதால் நீதிமன்றம் அதனை பரிசீலனை செய்து எனக்கு, உரிய சம்பளத்தை 2004 முதல் 2016 வரை நான் என் மேலதிகாரிகளுக்கு கொடுத்த மனுவின் அடிப்படையில் ரெகுலரைசேஷன் (regularization) செய்து கன்சிடர் (consider) செய்ய உத்தரவு பிறப்பித்தது. அதன் பிறகும் எனக்கு சம்பளம் செட்டில்மெண்ட் செய்யப்படாததால் நான் எனது மேலதிகாரியான கே.கே.நகர் அலுவலகத்திலுள்ள மேற்பார்வை பொறியாளர் அவர்களை கடந்த ஜனவரி மாதம் சந்தித்து கேட்டபோது விஜிலென்ஸ் டிபார்ட்மெண்ட்டில் என்கொயரி பெண்டிங்கில் இருப்பதால் அது முடிந்தபிறகு செட்டில்மெண்ட் செய்யப்படும் என்று சொன்னார். இது சம்மந்தமாக மேற்பார்வை பொறியாளர் அவர்களின் நிர்வாக அலுவலர் (Administrative Officer) திரு முருகேசன் அவர்களை அடிக்கடி சந்தித்து இதுபற்றி கேட்டேன். மேலும், எனக்கு எதிராக நிலுவையிலிருந்த டிபார்ட்மெண்டல் என்கொயரியும் முடிவு பெற்று குற்றம் நாட் புருவ்டு (NOT PROVED) என முடிவு செய்யப்பட்டது. இது சம்மந்தமாக 2020 ஜுலை மாதம் வாக்கில் நான் திரு.முருகேசன் அவர்களை நேரில் சந்தித்து கேட்டபோது விஜிலென்ஸ் டிபார்ட்மெண்ட்டிலிருந்து கிளியரன்ஸ் வரவேண்டும் அதன் பிறகு சம்பள நிலுவை செட்டில்மெண்டிற்கு ஏற்பாடு

செய்வதாக கூறினார். அதன்பிறகு 2020 ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் நான் அவரை தொடர்பு கொண்டு கேட்டபோது விஜிலென்ஸ் கிளியரன்ஸ் வந்து விட்டது எனவும் அது சம்மந்தமாக தன்னை நேரில் வந்து பார்க்கும்படி கூறினார். அதனை தொடர்ந்து நான் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு மீண்டும் கேட்டபோது அவர் என்னிடம் 02.09.2020-ந்தேதி மதியம் தன்னை அசோக் நகர் அஞ்சப்பர் ஹோட்டல் அருகில் வந்து சந்திக்கும்படி கூறினார். அதன்படி அன்று மதியம் சுமார் 01.30 மணிவாக்கில் அவரை சந்தித்தபோது அவர் என்னிடம் விஜிலென்ஸ் டிபார்ட்மெண்ட்டிலிருந்து வந்த கிளியரன்ஸ் கடிதத்தின் நகலை கொடுத்து மேலும் இதைத் தொடர்ந்து எனக்கு அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய சம்பள நிலுவைத் தொகை சுமார் ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து லட்சம்) வரை வரும் எனவும், அதனை பெற்றுத் தர ஏற்பாடு செய்ய அவருக்கு ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம்) பணம் தரவேண்டும் என்றும் அவ்வாறு தரவில்லையெனில் நிலுவைத் தொகை கிடைக்காது என்றும் மிரட்டலான தொனியில் சொன்னார். மேலும் அது சம்மந்தமாக ரூ.10,000/- முன்பணத்துடன் வெள்ளிக்கிழமை 04.09.2020 அன்று சந்திக்க வேண்டும் என்றும் பணத்தை ரெடி செய்துவிட்டு போனில் தொடர்பு கொள்ளும்படியும் அதன்பிறகு எங்கு வந்து பணத்தை பெற்றுக் கொள்ளுவது என அப்போது என்னிடம் சொல்வேன் என்றும் சொன்னார். அவர் கேட்கும் முன்பணம் ரூ.10,000/-த்தை லஞ்ச பணம் எனத் தெரிந்து கொண்டேன். 2004 முதல் எனக்கு கிடைக்க வேண்டிய சம்பள நிலுவைத்தொகையை அரசிடமிருந்து பெற்றுத்தர சென்னை மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், மின்பகிர்மான வட்டம், கே.கே.நகர் தெற்கு-1ல் நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு முருகேசனுக்கு முன்பணமாக ரூ.10,000/-த்தை லஞ்சமாக தர எனக்கு விருப்பமில்லை. ஆகவே இன்று 03.09.2020 தங்கள் முன் நேரில் ஆஜராகி அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க தங்களிடம் புகார் அளிக்கிறேன். மேலும் அவர் என்னிடம் கொடுத்த விஜிலென்ஸ் கிளியரன்ஸ் கடிதம் நாள் 13.08.2020-ன் நகலை தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். நீங்கள் எடுக்கும் நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு தருகிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள Sd/-xxx(K.பார்த்திபன்) 03.09.2020.

Received the complaint on 03.09.2020 at 18.00 hrs and registered. After verifying the genuineness of the complaint and complainant and reputation of the accused I registered a case in V&AC, City-III detachment in Cr.No. 2/AC/2020/CC-III u/s 7 of PC (Amended) Act 2018 at 20.00 hrs Sd/-xxx D.Sivagami, Inspr/V&AC/CC-III, 03.09.2020.

03/09/2020.

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016